தேனி மாவட்டம் கோட்டூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
முதல்வர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: முனைவர்.மு.சுல்தான் இப்ராஹிம், எம்.எஸ்சி., எம்.பில்., பி.எச்.டி.

---

ந.க.எண் : 118/அ/2021, நாள் : 14.09.2021.

பொருள்: கல்லூரிக்கல்வித்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி பணியமைப்பு- தேனி மாவட்டம், கோட்டூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி - நேரடி நியமனம் – தொகுதி IV – 2018-2019 மற்றும் 2019-2020 ஆண்டுகளுக்கு தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டது- திரு.ரெ.கணேசன் இளநிலை உதவியாளர் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்.

பார்வை: 1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் கடித ந.க. எண்:2361/PSD-1/2020 நாள்:29.05.2020.

2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் கடித ந.க.எண்:2361/PSD-E1/2020 நாள்:22.09.2020 மற்றும் 27.02.2021.

3. சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க. எண்:16252/பி1/2020 நாள்:27.08.2020.

4. இக்கல்லூரி முதல்வர் அவர்களின் கடித ந.க. எண்: 6/இ/2020, நாள்:14.09.2021

5. சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க. எண்:16252/பி1/2020 நாள்:07.09.2020.

********

பார்வை-1 மற்றும் 2-ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடிதத்தில் தொகுதி IV 2018-2019 மற்றும் 2019-2020 ஆண்டுகளுக்கு தெரிவு செய்யப்பட்டு, இளநிலை உதவியாளராக பணிபுரிய இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. பார்வை 3-ல் காணும் சென்னை, கல்லூரிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி இக்கல்லூரிக்கு இளநிலை உதவியாளராக பணிநியமன ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 4-ல் காணும், இக்கல்லூரி முதல்வர் அவர்களின் கடிதத்தின் படி தனியருக்கு பணிநியமனம் செய்யப்பட்டு 11.09.2021 முற்பகல் திரு.ரெ.கணேசன் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்தார்.

இதனைத் தொடர்ந்து பார்வை 5-ல், காணும் சென்னை கல்லூரிக்கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தில், கோரப்பட்டதற்கு இணங்க, பார்வை4-ல், காணும் இவ்வலுவலக கடிதத்தின் படி திரு. ரெ.கணேசன் இளநிலை உதவியாளர் என்பார் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்கண்ட நிபந்தனைகளை தெரிவித்த பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

**"இப்பணிவரன்முறை தொகுதி IV 2018-2019 மற்றும் 2019-2020 பணி நியமனம் தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்படவுள்ள இறுதி தீர்பாணைக்குட்பட்டது."**

தனியர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு தொடர்ச்சியான பணிகாலத்தில், இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவ காலத்தில் வைக்கப்படுவார் எனவும், இக்காலத்திற்குள் பாவனிசாகர் மற்றும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தேனி மாவட்டம் கோட்டூர்

முதல்வர் (மு. கூ.பொ)

**முதல்வர்**
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோட்டூர், தேனி மாவட்டம்-625 534.

பெறுநர்

திரு.ரெ.கணேசன், இளநிலை உதவியாளர்,

**நகல்.**

1. கல்லூரிக்கல்வி இயக்குநர்,
   கல்லூரிக் கல்வி இயக்ககம்,
   சென்னை-06
2. கல்லூரிக்கல்வி இணை இயக்குநர்,
   மதுரை மண்டலம்,
   மதுரை-02. (தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது)
3. உபரி